

# வள்ளுவரின் வாயிலில்

கே. ரவி

நிறுவனர்: வானவில் பண்பாட்டு மையம்

# வள்ளுவரின் வாயிலில்

**கே. ரவி**

**நிறுவனர்: வானவில் பண்பாட்டு மையம்**

அச்சிட்டோர்: **கிரிகுஜா பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.,**

சர்வே எண். 127/3-F, யாதவாள் தெரு, செம்மஞ்சேரி, சென்னை - 600 119.

## வள்ளுவர் திருவடியில்
## இன்னொரு சிறுமலர்

***மின்னலைக் கண்டார் விரல்முனையில் விண்வைத்தார்***
***சொன்னசொல்லில் சொல்லே பொருள்.***

'திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும்' என்று அடுக்கடுக்காய்ச் சொல்லி அதிசயிக்கிறான் பாரதி. கம்பனின் 'சவி உறத் தெளிந்த' 'சான்றோர் கவி' என்பது அவன் திருக்குறளைக் கருத்தில்கொண்டே எழுதியதோ என்று தோன்றுகிறது. தெய்வப் புலவர் தேன்தமிழில் அருளிய அந்த மறைநூல் அதனால்தான் தலைமுறைகளைத் தாண்டியும் தலைநிமிர்ந்து நிற்கிறது.

பகவத் கீதையைப்போலவே திருக்குறளுக்கும் எண்ணற்ற விளக்கவுரைகள் தோன்றின, இன்னும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. திருக்குறளின் கருத்து தொனிக்காமல் பேசுவதோ எழுதுவதோ, அட சிந்திப்பதோகூட இயலாது என்னும் வண்ணம் நம் சிந்தையின் பின்னணியில் சித்திரமாகத் துலங்குகிறது குறள். நமது மரபணுவிலும்கூட இந்த மறைநூல் நுழைந்துவிட்டது என்று சொல்வதும் மிகையாகாது.



குறளைக் கொண்டாடுவோரும் உண்டு; குறை கூறுவோரும் உண்டு. கொண்டாடுவோரும் விமர்சனங்களை ஐயப்பாடுகளாகவேனும் வைக்கிறார்கள். குறளை ஒதுக்கவே முடியாது என்பதைத்தான், அதை விபரீதமாகக் கண்டனம் செய்பவர்கள், நகைப்பு தரும் விதத்தில் விளக்கம் கூறுவோர்கள் நமக்கு நிரூபிக்கிறார்கள். அவரவர் நோக்கம், அறிவு, அறியாமைக்கு ஏற்ப அவரவர் பரபரத்துக்கொண்டிருக்க, சொல்ல வந்ததை முழுமையாய்ச் சொன்ன நிறைவுடன் வள்ளுவர் இளநகையோடு மௌனம் வகிக்கிறார். நாம் வளர வளர, அவரும் வானாய் வளர்ந்துகொண்டே இருக்கிறார்.

என் இனிய நண்பர் திரு கே. ரவி அவர்கள் இலக்கியத்தில் தோய்ந்தவர்; வியக்கவைக்கும் கவிஞர்; அன்பு நெஞ்சினர்; சினமே கொள்ளாமல் வாதிடவல்ல தர்க்க வல்லுனர்; பண்பாளர். அவருக்குக் குறள் மீதும் வள்ளுவர் மீதும் உள்ளது வெறும் மதிப்பு மட்டுமன்று. அது, நன்றியுணர்வு, நெகிழ்ச்சி இரண்டும் கலந்த பக்தி. காய்ச்சலில் படுத்திருந்தபோது அவர் எழுதிய சிறு நூல் இது. இதில் அவர் எழுப்பியிருக்கும் வினாக்களுக்கு அறிஞர்களே விடையிறுக்கத் தகுதி வாய்ந்தவர்கள். அவரது எல்லாக் கருத்துக்களோடும் உடன்படுவது எனக்கு இயலாத காரியம். இந்த நூலின் சில பகுதிகளிலும் அப்படியே. அவற்றுக்கு பதில்சொல்லப் புறப்படுவது அயர்வு தரும் வியர்த்தமான முயற்சி. ஆனால், எதைவேண்டுமானாலும் எழுதிவிடுபவர் அல்லர் அவர் என்பதால் எதையும் சொல்லும் உரிமை அவருக்குண்டு.

அதையும் தாண்டி அவரை நேசிப்பது எளிதானதே; ஏனெனில் அவர் நேசத்திற்குரியவர்.

உலக அறிஞர்கள் பங்கேற்கும் திருக்குறள் மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் ரவியின் இந்நூலைக் காண்பார்கள் என்பதில் எனக்கு மகிழ்ச்சியும் பெருமையும் உண்டு.

**அகமும் புறமும் அறமே குலவும்**
**சுகமே குறளின் குரல்.**

**– இசைக்கவி ரமணன்**

**அன்புக் காணிக்கை...**

வான்புகழ் திருக்குறள் பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்காகத் திருக்குறளில் பயிலும் தொன்மங்கள் பற்றித் தாம் தயாரித்த ஆய்வுத்தாளை என் பார்வைக்கு அனுப்பி, என்னைப் படிக்க வைத்து அதன்மூலம் அவர் சொல்ல வந்த ஒரு கருத்தை இன்னும் விரிவாகச் சொல்லவேண்டும் என்ற ஊக்கத்தை என் உள்ளத்தில் ஏற்படுத்தி, இந்த நூல் இரண்டே நாட்களில் எழுதி முடிக்கக் காரணமாய் இருந்த நல்லறிஞர், சிறந்த சிந்தனையாளர், இனிய நண்பர் முனைவர் அ. அறிவு நம்பி அவர்களுக்கு இந்தச் சிறிய நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

**கே. ரவி**

03.02.2011



# முன்னுரை

உலகில் மனிதன் தோன்றிய நாள் முதலாகவே தன் வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்வது என்பது பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டான். கோடானு கோடிவகைப் பொருட்குவைகளோடும் உயிர்க்கூட்டங்களோடும் உரசலின்றி இயைந்து வாழும் வழிமுறைகளை வகுப்பதிலேயே மனிதன் தன் சிந்தனை முயற்சியைப் பெரிதும் செலவிட்டான். அப்படிப்பட்ட முயற்சியில் அவனுக்கு உதவவும் வழிகாட்டவும் மாமுனிவர்கள் பலர் தோன்றினார்கள். பொய்யில் புலவர், செந்நாப்போதார், திருவள்ளுவரும் அப்படிப்பட்ட ஒரு மாமுனிவரே.

என் பள்ளிப் பருவத்திலேயே என்னை ஆட்கொண்ட நூல் திருக்குறள்.

***"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்***
***அதனின் அதனின் இலன்."*** *(குறள் 341)*

இந்தக் குறள் என் சிந்தையின் ஒரு மூலையில் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டேயிருக்கத் தொடங்கியது.



எது சரி என்பதைச் சில நேரங்களில் என் அறிவு எனக்கு உணர்த்த முடியாமல் திணறியபோதெல்லாம் திருக்குறட் தீர்வுகளே என்னை நெறிப்படுத்தின.

திருக்குறளே அறத்துக்கு உரைகல்; ஊக்கத்துக்கு ஊற்றுக்கண்; உலகப் பொதுமறை.

திருக்குறள் ஒரு மறைநூல் என்பதும் திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்பதும் என் நம்பிக்கை. திருக்குறளில் உள்ள ஏதேனும் ஒரு குறட்பாவின் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள என் அறிவு தயங்கினால் முதலில் என் அறிவை, அதன் உட்கூறுகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவேன். அந்தப் பரிசீலனையில் அறிவு தப்பிப் பிழைத்தால் அது ஏற்கத் தயங்கும் குறட்பாவிற்கான கருத்து வேறாக இருக்கக்கூடுமோ என்று சிந்திக்கத் தலைப்படுவேன். விடை கிடைக்கும் வரை போராடுவேன். திருக்குறள் மீது எனக்கு அத்தனை மரியாதை.

வான்புகழ் திருக்குறள் பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் தாம் படிக்க இருக்கும் திருக்குறட் தொன்மங்கள் பற்றிய ஆய்வுத்தாளைச் சிலநாட்களுக்கு முன் முனைவர் அ. அறிவுநம்பி அவர்கள் எனக்கு அனுப்பி என்னை அதைப் படிக்குமாறு பணித்திருந்தார். அதைப் படித்து முடித்ததும் வந்த உத்வேகத்தில் திருக்குறள் பற்றிய என் கருத்துகள் சிலவற்றைப் பதிவு செய்து வைக்கும் ஊக்கம் பிறந்தது. விளைவு, இந்தச் சிறிய நூல்.

மேற்சொன்னவாறு என்னைத் தடுமாற்றத்துக்கு உள்ளாக்கும் விரல் விட்டு எண்ணக்கூடிய வெகு சில குறட்பாக்களைத் தவிர்த்து நோக்கினால் திருக்குறள் உலகப் பொதுமறை என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

பல விஷயங்களில் என் கருத்தை என் மனைவி ஏற்றுக் கொண்டதே இல்லை; அப்படியே அவள் கருத்தை நானும் ஏற்றுக் கொண்டதில்லை. ஆனால் கருத்து வேறுபாடுகள் எங்களுக்கு இடையில் இடையூறாக வந்ததில்லை; ஒருவர் மேல் ஒருவர் நாங்கள் வைத்திருக்கும் காதலைக் குறைத்துவிடவில்லை. கருத்தை விடக் காதலும் நட்பும் பக்தியும் பன்மடங்கு முக்கியமானவை.

எனவே திருக்குறளில் உள்ள ஏதேனும் ஒரு குறட்பாவின் கருத்தோடு நான் முரண்பட நேர்ந்தாலும், திருவள்ளுவரிடம் எனக்குள்ள பக்தியை அது எள்ளளவும் குறைத்துவிடாது.



இந்த முன்முடிவோடு, அதே சமயம், தர்க்க ரீதியான அணுகு முறையில் பக்தி எந்த விதத்திலும் குறுக்கிடாது என்ற உறுதிப் பாட்டோடு திருக்குறள் நூல் பற்றிய சில ஆய்வுகளை நான் இப்போது மேற்கொள்கிறேன்.

*"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு." (299)*

*"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்னெஞ்சே தன்னைச் சுடும்." (293)*

## தொகுப்பும் பகுப்பும்

ஊக்கத்தால் உந்தப்பட்டுத் தம் உள்ளுணர்வில் இருந்து ஊற்றெடுத்துப் பீறிட்டு வரத் துடித்த ஆயிரக்கணக்கான குறட்பாக்களில் சிலவற்றுக்கு மட்டுமே திருவள்ளுவர் எழுத்து வடிவம் தந்திருக்க வாய்ப்புண்டு. அப்படி எழுத்து வடிவம் பெற்ற குறட்பாக்களில் இருந்து அவரோ அல்லது அவருக்குப் பிறகு வந்த வேறு தமிழ்ச் சான்றோரோ 1330 குறட்பாக்களைத் தேர்வு செய்து, மற்ற குறட்பாக்களை ஒதுக்கியிருக்கவும் வாய்ப்புண்டு. அப்படித் தேர்வு செய்யப்பட்ட குறட்பாக்களை ஒரு நிரல் முறைப்படுத்தி பால் அதிகாரப் பகுப்பு முறைப்பாட்டில் திருக்குறள் நூலைப் பிறகு யாரேனும் அமைத்திருக்கலாம்.

மேற்சொன்னவாறுதான் நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், அப்படி நடந்திருக்கக் கூடிய வாய்ப்பை மறுப்பதற்கில்லை. தாமே தம் நூலுக்குத் 'திருக்குறள்' என்று அவர் பெயர் சூட்டியிருப்பாரா என்றும் சிந்திக்கலாம்.



குறட்பா ஒவ்வொன்றுக்கும் நாம் தரவேண்டிய மதிப்பை, அது இடம் பெற்றுள்ள பால் அதிகாரத் தலைப்புக்குத் தர வேண்டியதில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. இப்படிச் சொல்வதால் இப்பொழுதுள்ள பால் அதிகாரப் பகுப்பு



முறைப்பாட்டை நான் குறைத்து மதிப்பிடுவதாகவோ, அல்லது, அதை மாற்றி அமைக்கத் தூண்டுவதாகவோ எண்ணத் தேவையில்லை. இப்பொழுதுள்ள முறைப்பாடு மிகச் சிறப்பான முறைப்பாடு; பல நூற்றாண்டுகளைக் கடந்தும் நிலைகுலையாமல் நிமிர்ந்து நிற்கும் முறைப்பாடு; இன்னும் சொல்லப்போனால், 'திருக்குறள்' என்ற நூல் காலம் கடந்து நிலைத்து நிற்க உதவும் முறைப்பாடு.

நான் சொல்ல வருவதெல்லாம், ஒரு குறட்பாவின் கருத்தைப் புரிந்துகொள்ளும் முயற்சியில், அது இடம்பெற்றுள்ள அதிகாரத் தலைப்பு பெரிய அளவில் குறுக்கிடத் தேவையில்லை என்பதுதான். ஒரு குறட்பாவின் கருத்தைத் தெளிவாகத் துலக்கும் ஒரு விளக்கத்தைப் புறக்கணிக்க அதிகாரத் தலைப்பு மட்டுமே காரணமாக அமையத் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

# மறையும் மறையும்

1968 அல்லது 1969 ஆம் ஆண்டு இருக்கலாம். அப்பொழுது சென்னை, விவேகானந்தா கல்லூரியில் நான் புதுமுக வகுப்பில் (P.U.C.) படித்துக்கொண்டிருந்த மாணவன்; வயது 16 இருக்கும்; இளங்கன்று. அப்பொழுதுதான் நண்பர் வ.வே.சு.வை முதன் முதலில் சந்தித்தேன். சென்னை, லயோலா கல்லூரி, ஆண்கள் ஓய்வறையில்தான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொண்டதும்தான் தெரிந்தது இருவரும் ஒரே கல்லூரி மாணவர்கள் என்று. அவர் விவேகானந்தா கல்லூரியில் தாவரவியல் இளங்கலை வகுப்பின் மூன்றாமாண்டில் பயின்று கொண்டிருந்தார்.

நாங்கள் இருவருமே ஒரு கவிதைப் போட்டியில் கலந்துகொண்டு கவிதை படிக்க லயோலா கல்லூரிக்கு அன்று வந்திருந்தோம். தலைப்பு, 'அழியா அழகு'; நடுவரோ கவிஞர் கண்ணதாசன்.



வ.வே.சு. கேட்டார்: நீ என்ன கவிதை எழுதி வந்திருக்கிறாய்? நான் ஓரிரு வரிகளை மட்டும் அவருக்கு அப்போது சொன்னேன். எனக்கே இப்போது அந்தக் கவிதை நினைவில் இல்லை. நான் எழுதி தொலைத்துவிட்ட பல கவிதைகளில் அதுவும் ஒன்று. ஆனால் நான் அவருக்குச் சொல்லிக் காட்டிய வரிகளில் வந்த இரண்டு சொற்றொடர்கள்



இன்னும் நினைவில் உள்ளன. 'கலையும் கலையும்' என்பது ஒன்று; 'மறையும் மறையும்' என்பது மற்றொன்று. அதாவது கலைப்பொருட்கள்கூடக் கலைந்து அல்லது தொலைந்து போகக் கூடும்; மறைநூல்களும் மறைந்து போகக்கூடும்; ஆனால், இயற்கை அழகு எந்நாளும் அழியா அழகு என்பதாக அக்கவிதை அமைந்திருந்தது என்று நினைக்கிறேன். அதைக் கேட்டதும் வ.வே.சு சொன்னார்: 'மறை என்பது மறைந்திருப்பது; மறைந்து போவதில்லை.'

வ.வே.சு சொன்னது எனக்கு அப்பொழுது முழுதும் விளங்கவில்லை. என் கவிதைக்கோ, வ.வே.சு வின் கவிதைக்கோ அந்தப் போட்டியில் எந்தப் பரிசும் கிடைக்கவில்லை. ஆனால், பல ஆண்டுகள் கழித்து இந்த நிகழ்ச்சி மீண்டும் நினைவுக்கு வந்தபோது வ.வே.சு அன்று தெரிந்தோ, தெரியாமலோ சொன்ன செய்தியே எனக்கு மிகப் பெரிய பரிசாக அமைந்தது. மறை மறைந்திருக்கலாம்; ஆனால் மறைந்து போகாது. வ.வே.சு. சொன்னது போலவே ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் மறைந்து கிடந்த ஒரு மறையை என் நண்பன் இசைக்கவி ரமணனின் சிந்தையை ஆட்கொண்டு அருட்குறள் மூவாயிரம் என்ற நூலாக என் குருநாதர் மீட்டுக் கொடுத்த வரலாற்றை விவரிக்க இது இடமில்லை.

'மறை' என்றால் வெளிப்படையாக ஒரு பொருளையும், உள்ளுறையாக வேறுபொருளையும் கொண்டிருக்கக்கூடிய நூல் என்று பொருள் கொள்ளலாமா?

திருக்குறள் மறைநூல் என்றால், அது வெளிப்படையாகச் சொல்லும் கருத்தைத் தவிரவும் அதிலுள்ள குறட்பாக்களில் உட்பொருளாக மறைந்து கிடக்கும் கருத்துக் கருவூலமும் உண்டோ? இந்தக் கேள்விக்கும், திருக்குறட்பாக்கள் தொகுத்துப் பகுக்கப்பட்டுள்ள பால்அதிகார முறைப்பாட்டுக்கும் தொடர்புண்டு. அப்படித் தொகுக்கும்போது நூலின் மறைத்தன்மைக்கு ஊறில்லாமல் அதன் உட்பொருட் கோவை சிதறுபடாமல் தொகுக்கப்பட்டதா என்பதே கேள்வி.

பாரதியும் 'The Occult Element in Tamil Speech' என்ற ஆங்கிலக்

கட்டுரையில் அக்கல்டிஸ்ட்ஸ் எனப்படும் மறை ஆன்மீக அன்பர்கள் பொதுவாக சமூக மொழியைப் பயன்படுத்தும்போது சொற்களின் பொதுப் பொருளும், மறை பொருளும் ஒரே சமயத்தில் வெளிப்படுமாறே பயன்படுத்துகிறார்கள் என்று எழுதியுள்ளான். நிறைய எடுத்துக்காட்டுகளும் தந்துள்ளான். 'உட்கார்' என்ற தமிழ்ச்சொல் உட்கு+ஆர் என்று பிரிந்து 'உள்ளமைதி பெறுக' என்ற வாழ்த்தாகவும் அமைகிற நுட்பத்தைச் சுட்டிக் காட்டியுள்ளான். உட்கார் என்று ஒரு யோகி சொன்னால் அதை இப்படியும் பொருள் கொள்ள வேண்டும் என்று விளக்குகிறான்.

திருக்குறள் ஒரு மறைநூல் என்று நம்புவோர் குறட்பாக்களின் மறைபொருளைத் தேர்ந்து, வெளிக்கொண்டுவர ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்பதே என் வேண்டுகோள்.



# எத்தனை கோடி இன்பம்

*"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்*
*புறத்த புகழும் இல." (39)*

இந்தக் குறள் என்ன சொல்கிறது?

இது அறத்தைப் பற்றிய குறள் இல்லை. அறம் என்பது என்ன என்று விளக்கும் முயற்சி இந்தக் குறளில் மேற்கொள்ளப்படவில்லை. இன்பம் அளிப்பதே அறம் என்று அறத்தின் இலக்கணம் வகுக்கும் குறளில்லை இது. மாறாக, இந்தக் குறள் இன்பம் என்றால் என்ன என்று வரையறுத்து, அறிவுறுத்தும் அற்புதக் குறள்.



இன்பம் என்பது மனத்தில் ஏற்படும் ஓர் உணர்ச்சி அல்லது சலனம். இன்பம் என்பதாகப் புலப்பாட்டுக்கு உட்படும் பருப்பொருள் எதுவும் எங்குமில்லை. ஓர் ஓவியத்தைப் பார்த்ததும் மனத்தில் மகிழ்ச்சி உண்டாகிறதே... அது இன்பமில்லையா? அந்த ஓவியமே இன்பம் என்று சொல்லிவிட முடியாதா? முடியாது. தன் காதலன் வரைந்த ஓவியத்தைக் கண்டு பெரிதும் மகிழ்ந்த காதலி, பிறகொருநாள் விபத்தில் காதலன் இறந்துவிட, அதற்குப்பிறகு அதே ஓவியத்தைக் காண நேரிடும்போது துயரம் பொங்க அழக்கூடுமன்றோ? இன்பம் தந்த ஓவியமே துன்பம் தரக்கூடுமன்றோ? இன்பத்திற்கு என ஒரு வடிவம்

கிடையாது. அது கடவுள் போல. அதனால்தான் கடவுளே இன்பவடிவினன் என்பது வழக்கம். கலைமகள் பாட்டில் பாரதியின் பாடல் வரிகள் இங்கே நோக்கத்தக்கவை:

**"குலவு சித்திரம் கோபுரம் கோயில்**
**ஈதனைத்தின் எழிலிடையுற்றாள்**
**இன்பமே வடிவாகிடப் பெற்றாள்."**

இன்பம் என்பது ஓர் அக நிகழ்ச்சி அல்லது நெகிழ்ச்சி. துன்பமும் அப்படித்தானே, ஏக்கமும் அப்படித்தானே? அப்படியானால் எந்த விதத்தில் இன்பம் மற்ற அக நிகழ்ச்சிகளில் இருந்து வேறுபட்டது? ஒப்புமையையும் வேறுபாட்டையும் ஒரே சமயத்தில் சொல்வதுதானே வரையறை அல்லது 'Definition'. மனிதன் ஒரு விலங்குதான், ஆனால் சிந்திக்கத் தெரிந்த விலங்கு. Man is a rational animal. இப்படிப் பலவற்றோடு ஒப்புமைப் படுத்தியும் வேறுபடுத்தியும் சொல்வதுதானே வரையறையின் இலக்கணம்?

எந்த அக நிகழ்ச்சி அறத்தால் விளைகிறதோ அதுவே இன்பம். இதுதான் குறளாசான் தரும் வரையறை; இன்பத்தின் இலக்கணம்.

அறத்தான் வருவதே இன்பம். அதாவது அறத்தின் உடனடி, நேரடி விளைவாக வருவதுதான் இன்பம். மற்ற சில அக நிகழ்ச்சிகள் மகிழ்ச்சி, குதூகலம் என்றெல்லாம் பெயர் பெற்று இன்பம்போல ஒரு கருத்து மயக்கத்தைத் தோற்றுவிக்கலாமே தவிர அவை இன்பமாக மாட்டா. அவையெல்லாம் புறத்த; புகழும் இல.

ஓர் ஓவியத்தைப் பார்த்ததும் மனத்தில் மகிழ்ச்சியுண்டாகலாம். ஒரு பூவின் வாசத்தைத் தொலைவில் நுகர்ந்ததுமே மனத்தில் ஒரு ரம்மியமான உணர்ச்சி ஏற்படலாம். காதலியின் இதழ்த்தேன் பருகியதும் கள்வெறி போல் மனம் நிலைகொள்ளாமல் துள்ளலாம். ஒரு குழந்தையின் சிரிப்பில் குதூகலம் அடையலாம். ஆனால் இந்த மகிழ்ச்சி, ரம்மியம், வெறி, குதூகலம், இன்னும் இவைபோன்ற பலவிதமான உடன்பாட்டு உணர்ச்சிகளெல்லாம் பேச்சு வழக்கில் 'இன்பம்' என்றுகூடப் பேசப்படலாம். ஆனால் இவற்றில் எதுவும் இன்பம் இல்லை. அறத்தான் வருவது மட்டுமே இன்பம். மற்றவை எல்லாம் புறத்த.



அடடா! இன்பத்தைத் தவிர மற்ற அக நிகழ்ச்சிகள் அனைத்துமே புறத்த என்று கணித்து அவற்றைப் புறக்கணித்துவிடுகிறாரே பொய்யாமொழிப் புலவர்! ஓர் அக நிகழ்ச்சி எப்படிப் புற நிகழ்ச்சி ஆக முடியும்?

புறத்த என்றால் வேறு என்று பொருள் கொண்டு, அறத்தான் வருவது மட்டுமே இன்பம், மற்றவையெல்லாம் இன்பத்தில் இருந்து வேறுபட்டவை என்று இக்குறட்பாவுக்குப் பொருள் சொல்லிவிடலாமா?

**"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**
**போஒய்ப் பெறுவ தெவன்." (குறள் 46).**

இந்தக் குறட்பாவில் கூடப் 'புறத்தாற்றின்' என்றால் வேறு வழியில் என்றுதானே பொதுவாகப் பொருள் கொள்கிறோம்!

அறத்தான் வரும் இன்பத்தைத் தவிர மற்ற அக நிகழ்ச்சிகள் எல்லாம் புறச்சார்பு உடையவை என்று பொருள் கொள்ள வாய்ப்புண்டோ?

இன்பமும் மகிழ்ச்சிதான். ஆனால் ஓர் ஓவியத்தைப் பார்த்ததும் அல்லது ஒரு பெரிய பரிசு கிடைத்ததும் அல்லது பதவி உயர்வு கிடைத்ததும் ஏற்படும் மகிழ்ச்சியில்லை அது.

இன்பமும் குதூகலம்தான். ஆனால் ஒரு குழந்தையின் சிரிப்பைக் கண்டதும் அல்லது எதிர்பாராமல், திடீரென்று மழை பொழிந்ததும் ஏற்படும் குதூகலம் இல்லை அது.

ஓவியம், பரிசு, பதவி உயர்வு, குழந்தை, மழை போன்ற புறநிகழ்ச்சி எதையும் சாராமல், அகத்திலிருந்து மட்டுமே ஊற்றெடுப்பது இன்பம் என்று சொல்லத் தோன்றுகிறதே! எப்படி? சில இதிகாச, வரலாற்றுக் காட்சிகளைப் பார்ப்போமே!

**காட்சி ஒன்று**

கர்ணனிடம் வந்து அவன் உடலோடு ஒட்டிப் பிறந்த கவச, குண்டலங்களை இந்திரன் யாசகமாகக் கேட்கிறான். கவச, குண்டலங்களைத் தந்துவிட்டால் போரில் பாண்டவர்கள் தன்னை எளிதில் வென்றுவிடமுடியும் என்றும் கர்ணனுக்குத் தெரியும். ஆனாலும் கொடுத்துச் சிவந்த கரங்களால் கவசத்தையும் இருசெவிக் குண்டலங்களையும் அறுத்தெடுத்துத் தருகிறான்

கர்ணன். புறத்தே மகிழ்ச்சி தரவே முடியாத இச்செயல் கர்ணன் அகத்தே இன்பம் விளைவித்தது ஏன்? அதைத்தான் ஈத்துவக்கும் இன்பம் என்று அடையாளம் காட்டுகிறார் திருவள்ளுவர்.

தன் உடைமைகளையும் நாட்டையும் தம்பிகளையும் மனைவியையும் தன்னையும் சூதில் பணையம் வைத்து இழந்த தருமபுத்திரனுக்கு ஈத்துவக்கும் இன்பம் தெரியவில்லையே என்ற ஆதங்கத்தை எதிரொலிப்பதாக வருகிறது குறட்பா:

*"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
*வைத்திழக்கும் வன்கணவர்" (குறள் 228)*

**காட்சி இரண்டு**

மதவெறியின் உச்சகட்டம்! பிற மதத்தாரைக் கொன்று குவிக்கும் ரத்தவெறி! சிவ பக்தர் ஒருவரை வேறுமதத்தினர் சித்திரவதை செய்து கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் தள்ளிவிட, அப்பொழுதும் நிலை குலையாமல் அவர் பாடும் குரல் கணீரென்றொலிக்கிறது:

*"மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நிழலே."*

*(அப்பர் தேவாரம்)*

கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் நின்றுகொண்டு வீணை இசை, வெள்ளி நிலா, வீசும் தென்றல், இளவேனிற் சிலிர்ப்பு, வண்டின் ரீங்காரம், குளிர்ந்த பொய்கை என்றெல்லாம் இறைவன் திருவடி நிழலை நினைத்து இவரால் எப்படிப் பாட முடிந்தது?

சிலுவையிலே ஆணியால் அறையப்பட்டு, முள்முடி தாங்கிக் குருதி சொட்டும் வேளையிலும், 'தந்தையே, இவர்கள் என்ன செய்கிறோம் என்றறியாமற் செய்கிறார்கள். இவர்களை மன்னித்து விடுங்கள்' என்று ஏசுபிரான் மன்றாடிக் கேட்கவில்லையா?

*"நம்பர்க் குரியர் நம்வீரர் தங்கள்*
*நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்"*



என்ற பாரதி வாக்கு பலிக்க, தடியடி பட்டுத் தலையில் ரத்தம் சொட்டச் சொட்டக் கொடியினைக் குமரன் தூக்கிச் செல்ல வில்லையா?

*"குத்தீட்டி ஒருபுறத்தில் குத்த வேண்டும்*
*கோடாரியால் மறுபுறத்தைப் பிளக்க வேண்டும்*
*ரத்தம்வரத் தடியாலே ரணமுண்டாக்கி*
*நாற்புறமும் பலருதைத்து நலியத் திட்ட*
*அத்தனையும் நான்பொறுத்து அகிம்சை காத்து..."*

என்ற நாமக்கல் கவிஞர் வரிகளின்படி மகாத்மா காந்தியடிகள் வாழ்ந்து காட்டவில்லையா?

தொலைவிலிருந்து ஒரு குரல் கேட்கிறதே!

*"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்*
*பொன்றும் துணையும் புகழ்." (குறள் 156)*

அறத்தான் வராத அகமகிழ்ச்சிகள் புறத்த மட்டுமன்று; புகழும் இல என்ற வான்மறை வாசகம் மெல்லப் புரியத் தொடங்குகிறதா?

தாம் இறந்த பிறகும் புகழோடு திகழும் இந்த மாமேதைகளை நினைவிற்கொண்டால், பொன்றும் துணையும் புகழ் என்பது இறக்கும் வரையிலும் புகழ் எனப் பொருள் படாது என்பதும் புரியத் தலைப்படும். உலகமே அழியும் வரைக்கும் நிலைத்திருக்கும் புகழ் அது என்று சரியான உரைகண்ட பரிமேலழகர் பெருமானை மனம் வாழ்த்தும்.

இந்த அளவு இன்பத்தின் இலக்கணத்தை, அடையாளத்தை, அளவுகோலை விவரிக்கும் 'குறள்' இருக்கவேண்டிய இடம் அறத்துப்பாலா, இன்பத்துப்பாலா என்று கேள்வி எழத்தானே செய்யும்!

ஆனால் 'இன்பத்துப்பால்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள பாலில், திருவள்ளுவர் எதை இன்பம் என்று வலியுறுத்துகிறாரோ அத்தகைய இன்பம் பற்றிப் பேசப்படவில்லை. அதைக் காமத்துப்பால் என்பதே பொருத்தம். அதை இன்பத்துப்பால் என்றழைப்பதுகூட 'அறத்தான் வருவதே இன்பம்' என்று அடித்துச்

சொன்ன திருவள்ளுவ நெறிக்கு முரணாகக் கூடும்.

தான் திருவள்ளுவரைப் போற்றுவதற்கு அடிப்படைக் காரணம் என்று பாரதி அடிக்கோடிட்டுக் காட்டும் வரி நோக்கத்தக்கது.

*"அறமொன் றேதரும் மெய்யின்பம் என்றநல்*
*அறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்."*

இதைச் சொல்லிவிட்டு அவன் மேலும் எழுதுகிறான்:

*"பிறவிரும்பி உலகினில் யான்பட்ட*
*பீழை எத்தனை கோடி."*

அறத்தால் மட்டுமே வரக்கூடிய இன்பம் தவிர வேறு விதங்களில் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு ஆசைப்பட்டுத் தான் பெரும் இன்னலுக்கு உள்ளானதைச் சொல்லிவிட்டு, இளைஞர்களுக்கு ஒரு கட்டளை இடுகிறான், பாரதி:

*"அறமொன்றே தரும் மெய்யின்பம் ஆதலால்*
*அறனையே துணை என்றுகொண்டுய்திரால்."*

மிகத் தெளிவான தீர்ப்பு!

காமத்துப்பாலில் வள்ளுவர் குறிப்பிடும் இன்பம் பற்றி எதுவும் பேசப்படவில்லை. அது ஆண்பெண் இடையே ஏற்படும் சலனம் பற்றியதே. இதைச் சொல்லத் தயங்கவே வேண்டாம்.

இன்னும் தெளிவாகவே திருவள்ளுவர் சொல்கிறார்:

*"சிற்றின்பம் வெஃகி அறன்அல்ல செய்யாரே*
*மற்றின்பம் வேண்டு பவர்."     (குறள் 173)*

இனியும் காமத்துப்பாலை இன்பத்துப்பால் என்று அழைக்கலாமா? *

* 1330 குறட்பாக்கள் கொண்ட திருக்குறளில் 'இன்பம்' என்ற சொல் 24 குறட்பாக்களில் மட்டுமே பயிலக் காண்கிறோம். அதிலும் பத்துக் குறட்பாக்கள் அறத்துப்பாலிலும், பன்னிரண்டு, பொருட்பாலிலும் உள. காமத்துப்பாலில் 'இன்பம்' என்ற சொல் இரண்டு குறட்பாக்களில் மட்டுமே வருகிறது. இன்பம் என்ற சொல் காணப்படும் குறட்பாக்கள்: குறள் எண் 39, 65, 75, 94. 98, 156, 173, 228, 352, 369, 399, 501, 615, 628-30, 669, 738, 754, 854, 869, 946, 1166, 1330. மேலே சொன்ன கருத்தை இந்தக் குறட்பாக்களில் உரசிப் பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது ஆய்வாளர்கள் பணி; குறிப்பாக, 501 ஆவது குறள்...!



# திருவள்ளுவரின் அறப்புரட்சி

திருக்குறள் ஓர் உன்னதமான நீதிநூல் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அத்துடன் நின்றுவிடலாமா என்பதுதான் கேள்வி. உலகில் எத்தனையோ நீதி நூல்கள் உண்டு. திருக்குறளின் தனிச்சிறப்புக்குக் காரணம் அது ஒரு நீதி நூல் என்பதாக மட்டும் இருக்க முடியாது. அறிவுக்குச் செய்யப்படும் உபதேசங்கள் பெரிய பயன் விளைவிப்பதில்லை என்பது கண்கூடு. எது நல்லது எது கெட்டது என்று யாருக்குத் தெரியாது? பொய் சொல்லக் கூடாது, கொலை செய்யக் கூடாது, மற்றவர் பொருளைக் கவரக் கூடாது, பொறாமைப் படக் கூடாது, சோம்பியிருக்கக் கூடாது போன்ற அடிப்படை விதிகள் யாருக்குத் தெரியாது? இவற்றைத் திருவள்ளுவர் வந்து சொல்லவில்லை என்றால் யாருக்குமே ஈதனைத்தும் தெரியாமல் போயிருக்குமா? திருவள்ளுவர் காலத்துக்கு முன் வாழ்ந்தவர்களுக்கு இந்த விதிகள் தெரியாது என்றுதான் சொல்ல முடியுமா?



திருக்குறளின் தனிச்சிறப்பு என்ன? கவிஞர்களும் புலவர்களும் பெரும்பாலும் வாசகனின் அறிவை விளித்து எதுவும் சொல்லத் தலைப்படுவதில்லை. அவர்கள் களம் வேறு. அது உணர்வுக் களம். அறிவுரைகள் செவிகளைத் தாண்டிச் சிந்தை வரை

செல்லக்கூடும். அதையும் கடந்து உள்ளுணர்வுக் களத்தை ஊடுருவிச் சென்று அறத்தின் விதைகளை அங்கே தூவி மலர்ந்து வளரச் செய்யும் மாய வித்தையை மாமுனிவர்களும் கவிஞர்களும் மட்டுமே செய்ய வல்லவர்கள். சொற்களை மந்திரங்களாக மாற்றும் ஆற்றல் அவர்களுக்குத்தான் உண்டு. 'மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்' என்றுதானே பாரதி விரும்பினான்!

சொல் என்பதை மிகச்சாதாரணமாக எண்ணிவிட முடியாது. கம்ப ராமாயணத்தில் ஒரு காட்சி. கங்கையின் ஒருகரையில் ராமபிரானோடு இருக்கும் குகன் மறுகரையில் பரதன் பரிவாரங்களோடு வருவதைப் பார்த்து முதலில் சந்தேகப் படுகிறான். நாடு கொடுத்த நாயகனுக்குக் காடுகூடக் கொடுக்க மனமின்றி பரதன் படையெடுத்து வந்துவிட்டானோ என்பதுதான் அவன் சந்தேகம். பரதனுடைய படையைத் தன் வேட்டுவப் படை எதிர்த்துப் போரிட்டு வென்று துரத்தியடிக்க வேண்டும் என்று சூளுரைத்து வீர வசனம் பேசுகிறான் குகன். அப்பொழுது அவன் வாயிலாகக் கம்பர் பேசுகிறார்:

***"ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ***
***வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ***
***தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ."***

ஒரு சொல் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தவல்லது என்பதைத் தானே கவிச்சக்கரவர்த்தி இங்கே உணர்த்துகிறார்?

"மஞ்சனே அச்சொல் மருமத்தே பாய்வதன்றோ" என்று பாஞ் சாலி மூலம் பாரதியும் இதைத்தானே உறுதி செய்கிறான்?

"சொல்லொன்று வேண்டும் தேவ சக்திகளை நம்முள்ளே நிலைபெறச் செய்யும் சொல்லொன்று வேண்டும்" என்பதும் பாரதியின் கவிதை வேட்கையன்றோ?

***"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை***
***வெல்லும்சொல் இன்மை அறிந்து." (குறள் 645)***

என்பது திருவள்ளுவர் வாக்கு.

சான்றோர் பழிக்கும் வினை எதையும் செய்யக் கூடாது என்ற பொது நீதி எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். ஆனால் ஈன்றாள்



பசிகாண்பானாயினும் செய்யற்க என்ற வள்ளுவ எச்சரிக்கை வாசகனின் அறிவு நிலையைத் தாண்டி உணர்வுக் களத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தவல்லது. நல்லவனுக்கு ஓர் அமில சோதனையை வைக்கிறார் திருவள்ளுவர். உன் தாய் உணவின்றிப் பட்டினி கிடப்பதைப் பார்க்க நேரிட்டாலும் தவறு செய்யாதே என்பதுதான் அந்த அமில சோதனை. இந்தச் சோதனையில் வென்று வெளி வருவது அவ்வளவு எளிதன்று. எல்லாம் நன்றாக இருக்கும்போது, பெரிய துன்பத்தை எதிர்கொள்ளாதபோது நல்லவனாக இருப்பது எல்லாருக்குமே எளிது. ஆனால் பெற்ற தாய் உணவின்றிப் பட்டினி கிடக்கும்போது அல்லது நோய்வாய்ப்பட்ட தன் குழந்தை மருந்து வாங்கக் காசில்லாமல் சாகக் கிடக்கும்போது நல்லவனாக இருக்கும் துணிவும் நெஞ் சுறுதியும் எல்லாருக்கும் எளிதில் கிட்டுவதில்லை. இதைத்தான் நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் என்று பாரதி விரித்துக் குறிப்பிடுகிறான். நெஞ்சில் உரமில்லாத நேர்மைத் திறம் நிலைத்த தன்மை உடையதாக இருக்காது என்பதே செய்தி.

தாயின் பசி கண்டும் தவறு செய்யக் கூடாது என்று சொன்ன அதே திருவள்ளுவர் வேறொன்று சொல்கிறார். ஒருவன் பல்லக்கில் அமர்ந்துகொண்டு செல்கிறான்; இன்னொருவன் அந்தப் பல்லக்கைச் சுமந்து செல்கிறான். அவர்களுக்கு இடையே இதுதான் அறத்தின் வழி என்று சொல்லக் கூடாது.

***'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை***
***பொறுத்தானோ டூர்ந்தான் இடை' (குறள் 37)***

இதன் பொருள் என்ன?

அறம் வேறு; விதி வேறு. சமஸ்கிருத மொழியில் உள்ள தொன்மையான நூல்களிலும் இந்த வேறுபாடு காணக் கிடைக்கிறது. தர்மம் வேறு; கர்மத்தால் விளையும் பயன் வேறு. கம்பர் இதைத் தமக்கே உரிய பாணியில் தக்க இடத்தில் மிகப் பொருத்தமாகக் குறிப்பிடுகிறார். 'நீ முடி சூட்டிக்கொள்ள வேண்டாம். காட்டுக்குப் போய்ப் பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு வா' என்று கைகேயி ராமனை அனுப்பிவிட்ட தருணத்தில் ராமபிரான் எப்படி வருகிறான் என்பதை கவிச்சக்கரவர்த்தி எப்படிச் சொல்கிறார் தெரியுமா?

*'இழைக்கின்ற விதி முன் செல்ல*
*தருமம் பின் இரங்கி ஏக'*

...அதாவது விதி அவனுக்கு முன்னால் பாதை இழைத்துக் கொண்டே செல்கிறதாம்; தர்மமோ அவன் பின்னால் கைகட்டிக் கொண்டு இரக்கத்தோடு செல்கிறதாம். இப்படிப்பட்ட காட்சி ஓவியங்கள் மிக்குடையதால்தான் கம்பனின் காவியம் கம்ப சித்திரம் என்றே போற்றப்படுகிறது.

அறமும் விதியும் கிடக்கட்டும். கவிதை அழகை முதலில் ரசிப்போம். செல்லுதல் வேறு; ஏகுதல் வேறு. செல்லுதல் என்பது ஒன்றை விட்டு நீங்கி அல்லது தள்ளிப் போவது. ஏகுதல் என்றால் ஒரு குறிக்கோளோடு ஒன்றை நோக்கிப் போவது. மலர்மிசை ஏகினான் என்பதைக்கூட நாம் இந்தப் பொருளில் அணுகிப் பார்க்கவேண்டும்.

ஒருவன் பொருட் செல்வமின்றி இருத்தலும் வேறொருவன் செல்வச் செழிப்போடு இருத்தலும் விதியின் பயனால் என்று பேச்சுக்காக வைத்துக்கொண்டாலும் அதன் காரணமாகச் செல்வந்தன் பல்லக்கில் ஏறி அமர்ந்துகொண்டு வறியவனைப் பல்லக்குச் சுமக்க வைப்பது அறம் ஆகவே முடியாது என்ற தெளிவைத் திருவள்ளுவருக்கு முன்னால் வேறெவரும் தரவில்லை.

ஒருவன் பொருட் செல்வமின்றி இருத்தலும் வேறொருவன் செல்வச் செழிப்போடு இருத்தலும் விதியின் பயனால் என்பதைக் கூட திருவள்ளுவர் ஒப்புக்கொள்ளவில்லை. அது மறுபரிசீலனைக்கு உரியது என்கிறார். அதுவும் தீயவன் செல்வச் செழிப்புடன் இருத்தலும் நல்லவன் வறுமையில் வாடுவதையும் அவர் ஏற்க மறுக்கிறார். அது மனிதன் சரியாகச் சிந்திக்காததால் விளைந்த கோளாறு என்பதே அவர் தீர்ப்பு.

***"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்***
***கேடும் நினைக்கப் படும்." (குறள் 169)***

இந்தச் சிந்தனைத் தொடரின் உச்சகட்டமே கீழ்வரும் புரட்சிக் குறள்:



***"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து***
***கெடுக உலகியற்றி யான்." (குறள் 1062)***

தனியொருவனுக்கு இழைக்கப்பட்ட அநீதியால் கொதித்தெழுந்து ஒரு நகரையே தீக்கிரையாக்கிய பத்தினித் தெய்வத்தின் ஆவேசத்துக்கும், 'என் அன்னையின் கற்புத்தீயுடனா மோதத் துணிந்தாய்... உன் நகரத்தையே தீக்கிரையாக்குகிறேன் பார்' என்று இலங்கையை எரித்த அனுமனின் சினத்துக்கும், "தனியொருவனுக்கு உணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியின் சீற்றத்துக்கும் வித்தாக அமைந்தது வள்ளுவரின் இந்த அறச்சீற்றமே.

ஒரு தனி மனிதன் உணவின்றிப் பசித்துக் கிடந்தாலும் உலகையே அழித்திடுவோம் என்ற சீற்றத்துக்கு வித்தான குறளும் தாயின் பசி கண்டும் அற நிலை தவறாமல் இருக்கவேண்டிய அமில சோதனைக் குறளும் சேர்ந்திருக்கக்கூடிய நூல் வேறு எதாவது எந்த மொழியிலாவது உண்டோ?

காமத்துப்பால் எழுதும்போதுகூடத் தன் வீட்டில் இருந்து தன் உழைப்பில் ஈட்டிய உணவை அருந்துவது போன்ற உணர்வையும் பெருமிதத்தையும் தலைவியின் தழுவுதல் தந்தது என்று பாடிய வள்ளுவரின் அறப்புரட்சிக்கு இன்னும் சான்றுகள் தேவையோ?

## மயிலையும் ஈரோடும்

'என்னய்யா இது, தலைப்பே மிகவும் நக்கலாக இருக்கிறது!' என்று சொல்லத் தோன்றுகிறதோ? சிக்கலாக இல்லாதவரை சரி.

'மயிலாப்பூர்' என்பது ஒரு காலத்தில் பிராமணர்கள் அதிகமாக வசித்து வந்த பகுதி என்று கருதப்பட்டது. ஈரோடோ பிராமண எதிர்ப்பின் பிதாமகர் பிறந்த இடம். இரண்டுக்கும் திருக்குறளோடு என்ன தொடர்பு?

திருவள்ளுவர் காலத்தில், செந்தமிழில் 'பிராமணர்' என்ற ஜாதிப் பெயர் இருந்ததாகத் தெரியவில்லை. 'அந்தணர்' என்றும், 'பார்ப்பார்' என்றும் அந்த ஜாதியர்கள் குறிக்கப்பட்டனர். 'பார்ப்பனர்' என்ற சொல் கூடப் பின்னால் ஏற்பட்ட திரிபு அல்லது வழக்கு.

இன்றைய சூழ்நிலையில் இதெல்லாம் வீண்பேச்சாகத் தோன்றுகிறதோ?



பார்ப்பானை ஐயரென்ற காலமெல்லாம் பாரதியின் பாட்டுக் கனவில் பொசுங்கியேவிட்டது. ஆனாலும், நீறு பூத்த நெருப்பாக, அங்கொன்றும், இங்கொன்றுமாக, பிராமண ஆதிக்க உணர்வும், பிராமண எதிர்ப்புணர்வும் இருக்கத்தான் செய்கின்றன.



ஒரு ஜாதியை எதிர்ப்பதே ஓரியக்கமாக வளரும் அளவுக்கு அந்த ஜாதி ஆதிக்கம் செலுத்தி வந்தது ஒரு வரலாற்றுச் சாபம்.

வேதங்களிலோ, பிறகு வந்த உபநிடதங்களிலோ பிறப்பால் ஒருவன் ஜாதியை நிர்ணயம் செய்து உயர்வு, தாழ்வு சொல்லும் கொடிய வழக்கம் குறிப்பிடப்படவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. உபநிடதங்களின் சாரத்தைத் தருவதாகப் பல பண்டிதர்கள் கருதிய 'பிரும்ம சூத்திரம்' என்ற மறை நூலில் ஜாதிப்பாகுபாடு பற்றி எந்தக் குறிப்பும் இல்லை என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். பகவத் கீதை ஜாதி பேதங்களை வலியுறுத்தவில்லை என்று பாரதி திட்டவட்டமாகத் தெரிவிக்கிறான். அவனே பகவத் கீதையைத் தமிழாக்கித் தந்துள்ளான். அதற்கான முன்னுரையில் அவன் எழுதுகிறான்:

''கல்வியும் விநயமும் உடைய அந்தணனிடத்திலும், மாட்டினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும், அதையுண்ணும் சண்டாளனிடத்திலும் அறிஞர் சமமான பார்வையுடையோர்" (5 ஆம் அத்தியாயம்: 18 ஆம் சுலோகம்) என்று பகவான் சொல்லுகிறார்.

எனவே கண்ணபிரான் மனிதருக்குள் ஜாதி வேற்றுமையும் அறிவு வேற்றுமையும் பார்க்கக்கூடாதென்பது மட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருப்பதே ஞானிகளுக்கு லக்ஷணமென்று சொல்லுகிறார்."

எது எப்படி ஆயினும் திருக்குறளில் ஜாதிப் பிரிவுகள் பற்றிய குறிப்பு இல்லை என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம்.

'அந்தணர்' என்ற சொல்லும் 'பார்ப்பான்' என்ற சொல்லும் குறட்பாக்களில் உள்ளன.

***"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்***
***பிறவாழி நீந்தல் அரிது." (குறள் 8)***

***"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்***
***செந்தண்மை பூண்டொழுகலான்." (குறள் 30)***

***"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்***
***பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்." (குறள் 134).***

மேலே தரப்பட்டுள்ள மூன்று குறட்பாக்களில் முதலாவது 'கடவுள் வாழ்த்து' அதிகாரத்திலும், இரண்டாவது 'நீத்தார்பெருமை' என்ற அதிகாரத்திலும், மூன்றாவது 'ஒழுக்கமுடைமை' என்ற அதிகாரத்திலும் வைக்கப்பட்டுள்ளன. 'அறவாழி அந்தணன்' என்ற சொற்றொடர் கடவுளையோ அல்லது கடவுளுக்கு நிகராக வைத்துப் போற்றப்படும் குருநாதரையோ குறிக்கிறது என்பதே குறட்கருத்து.

*"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவனடி சேராதார்."* *(குறள் 10)*

என்ற குறளோடு அண்மையில் வைத்து 'அறவாழி அந்தணன்' என்று தொடங்கும் குறளைப் பொருள் கொண்டால், பிறவியாகிய கடலைக் கடக்க இறைவனடி சேர்தலே வழி என்ற கருத்துச் சூழல் உருவாகிறது. அப்படியானால் 'அறவாழி அந்தணன்' என்பது இறைவனையே குறிக்கும் சொற்றொடர் என்று துணியலாம்.

அடுத்த குறள் 'அந்தணர் என்போர் அறவோர்' என்று தொடங்குகின்றது. 'அறத்தான் வருவதே இன்பம்' என்பது எப்படி இன்பத்தை வரையறுத்து, அதன் இலக்கணத்தைத் தெளிவுபடுத்தியதோ, அதுபோலவே இந்தக் குறளில் அந்தணர் யார் என்று வரையறுத்து அந்தணத் தன்மையின் இலக்கணம் குறிக்கப்பட்டுள்ளது. அறவோனாக, அறநெறியிலிருந்து சற்றும் வழுவாத தன்மையனாக இருப்பதே அந்தணனுக்கு அடையாளம். அப்படி அறவோனாக இருப்பதே அந்தணத் தகுதி அளிக்க வல்லது. தந்தையும் தாயும் அந்தணர்கள் என்பதால் மட்டுமே தானும் அந்தணன் என்று எவனும் சொல்லிக்கொள்ள முடியாது. தந்தையும் தாயும் அந்தணர் குலத்தார் இல்லையென்றாலும் அறவோனாக இருப்பவன் அந்தணனே. அதாவது, அந்தணன் என்றால் அறவோன்; அறவோன் என்றால் அந்தணன். சொற்கள் இரண்டு; பொருள் ஒன்றே. இதுதான் திருக்குறள் நீதி. இதனால்தான், இந்தக் கருத்தோட்டத்தில் தம் மனத்தைப் பறிகொடுத்த மனோன்மணியம் சுந்தரனார் வியந்து பேசுகிறார்:

*"வள்ளுவன்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்*
*உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி."*



ஒருவன் தன்னை அந்தணன் என்று சொல்லிக்கொண்டால் அவன் அறவோனாக இருக்கவேண்டும் என்ற முதல்நோக்குத் தீர்மானம் (prima-facie case) உருவாவதும், அவன் நடத்தை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவன் அறவோனே, அல்லது அறவோன் அல்லன் என்ற உறுதி ஏற்படும்வரை இந்த முதல் நோக்குத் தீர்மானமே சரி என்பதும் திருவள்ளுவர் காலத்தில் மெய்மைக் கூறுகளாய் இருந்தன போலும்.

அந்தோ, ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளில் கதை மாறியதே! திருவள்ளுவருக்குப் பிறகு சுமார் இருநூறு ஆண்டுகள் கழித்துச் சிலப்பதிகாரக் காப்பியம் படைத்த இளங்கோ அடிகள் காலத்தில் அந்தணரும் அறவோரும் ஒரு பொருள் குறிக்கும் இருசொற்களாக இல்லாமற் போயிற்று. குற்றமற்ற தன் கணவனை ஆராயாமல் குற்றவாளி என்று மயங்கிக் கொன்றுவிட்ட மதுரையரசனின் மேல் சினங்கொண்ட கண்ணகி மதுரை மாநகரையே எரிக்கத் துணிந்த போது அக்கினியைப் பார்த்து 'நல்லவர்களை விட்டுவிட்டுத் தீயவர்களை மட்டும் சுட்டுப் பொசுக்கு' என்று ஆவேசத்திலும் விவேகம் இழக்காத நிலையில், பார்ப்பார், அறவோர், குழவி, பசு, பத்தினிப் பெண்டிர் போன்றோரை விடுத்துத் 'தீத்திறந்தோர் பக்கமே சேர்க' என்று நெருப்புக்குக் கட்டளையிடுகிறாள். இது இளங்கோவின் காப்பியக் காட்சி. பார்த்தீர்களா, இளங்கோ காலத்தில் பார்ப்பார் வேறு, அறவோர் வேறு என்று ஆகிவிட்ட நிலையை!

ஆனால் அப்பொழுதுகூட சுடப்பட வேண்டாத நல்லோர் கூட்டத்தில் பார்ப்பாரை வைக்கும் அளவுக்கு நிலைமை இருந்தது. சுமார் 1800 ஆண்டுகளில் நிலைமை அடியோடு மாறியது. 'பாம்பையும், பார்ப்பானையும் கண்டால் பார்ப்பானை அடி, பாம்பை விட்டுவிடு' என்று பொதுமேடைகளில் சிலர் பேசக்கூடிய நிலை உருவானது. இந்த மாற்றத்துக்கு என்ன காரணம்?

திருவள்ளுவர் அவதரித்த திருமயிலையில் தொடங்கி, மதுரை வழியாக ஈரோட்டுக்கு ஒரு வரலாற்றுப் பயணம் மேற்கொள்ள இந்தச் சிறிய நூலில் இடம் போதாது; காலமும் போதாது.

ஆனால் ஒரு முக்கியமான செய்தியை மட்டுமாவது இங்கே

பதிவு செய்தாகவேண்டும்.

அறம் என்பது பல உட்கூறுகள் உடைய பெருங்கோப்பு என்றாலும், புலால் மறுத்தலை ஓர் அடிப்படை அறமாக அறிவித்ததே திருவள்ளுவரின் மிகப்பெரிய அறப்புரட்சி என்று துணிந்து சொல்லலாம்.

*"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்." (குறள் 260)*

என்ற குறட்பாவோடு சேர்த்துப் படித்தால்தான் 'அந்தணர் என்போர் அறவோர்' எனத் தொடங்கும் குறளில் உள்ள 'மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகல்' என்பது புரியும்.

பார்ப்பானின் முதற்கடமை, முதல் இலக்கணம் புலால் மறுத்தலே என்பது திருவள்ளுவரின் துணிபு. ஆங்கிலத்தில் சொல்வதென்றால் "the hallmark of brahminhood is vegetarianism". யாகம், யக்ஞங்கள் செய்வதால் மட்டுமே ஒருவன் பார்ப்பான் அல்லது அந்தணன் ஆகிவிட முடியாது என்று திருவள்ளுவர் தெளிவாக அறிவுறுத்தினார்.

*"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று." (குறள் 259)*

பார்ப்பான் வேதங்களை, மந்திரங்களை மறந்து போனாலும் பரவாயில்லை. அவன் மீண்டும் ஓதி மனனம் செய்துகொள்ளலாம். ஆனால் அவன் தன் பிறப்பொழுக்கம் குன்றினால் அவனுக்கு மீட்சியே இல்லை என்பதுதான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வள்ளுவ எச்சரிக்கை.

*"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்." (குறள் 134)*

இந்த எச்சரிக்கையைப் புறக்கணித்துவிட்டுப் பார்ப்பனர்கள் பலர் புலால் உண்டும், கள்ளுண்டும் ஆசாரம் கெட்டுத் திரிந்தார்கள். ஆசாரம் கெட்டதால் தங்கள் ஆச்சாரியத் தகுதியை இழந்து, அதே சமயம் மற்றவர்கள் எல்லாரும் தங்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி அவர்களைப் பார்ப்பனர்கள் ஒடுக்கி, முடக்கி



வைத்திருந்தபோதுதானே ஈரோட்டிலிருந்து புறப்பட்டது பார்ப்பனிய எதிர்ப்புக் குரல்.

மயிலையின் எச்சரிக்கையைப் பார்ப்பனியம் மறந்ததால் அது ஈரோட்டுப் பீரங்கியை எதிர்கொள்ள நேரிட்டது என்பதே வரலாற்று உண்மை.

மேற்சொன்ன கருத்தைப் பதிவு செய்யும்பொழுதே இன்னொரு கருத்தையும் இங்கே சொல்லியே ஆகவேண்டும். மிகத் தவறுதலாக, ஒரு வரலாற்றுக் கோளாறாகத் தேவையற்ற கூட்டணி ஒன்று இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் தலை தூக்கியது. அந்தக் கூட்டணி அல்லது கூடா விவாகத்தை நடத்தி வைத்தவரும் ஈரோட்டுச் சிங்கம்தான். பார்ப்பனிய எதிர்ப்பும், கடவுள் மறுப்பும் செய்துகொண்ட விவாகத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

கடவுள் மறுப்பு சரியா, தவறா என்ற விவாதம் இங்கே மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் கடவுள் மறுப்பியக்கம் திருவள்ளுவரைக் கைவிடத் தயாராக இல்லை என்பதையும், திருவள்ளுவருக்கும் கறுப்புச் சட்டை அணிவித்துத் தங்கள் கூடாரத்தில் நாயக்கருக்குப் பக்கத்தில் நாயனாரை எப்படியாவது அமர்த்திவிட வேண்டும் என்ற முயற்சியில் அண்ணன்மார்களும் தம்பிமார்களும் போட்டிபோட்டுக்கொண்டு ஈடுபட்டதையும் இங்கே குறிப்பிடாமல் விட முடியாது. ஐயா என்றதெல்லாம் போய் ஐயன் வள்ளுவன் என்று பேசும் அளவுக்குப் பகுத்தறிவுவாதிகள் முன்னேறியிருப்பதையும் குறிப்பிடாமல் விடமுடியாது. இந்த முயற்சியின் விளைவாக, திருக்குறளுக்குப் பல விபரீத உரைகள் எழுதப்பட்டன எனபதைத் தமிழ்ச் சான்றோர்கள் அறிவார்கள்.

பகுத்தறிவுப் பாசறையின் கவனத்துக்குச் சில செய்திகளை முன்வைத்தே ஆகவேண்டும்.

(அ) ஜாதி ஆதிக்கத்துக்குத் துணை போகாத நூல் திருக்குறள். ஆனால் நல்ல குலத்தில் பிறப்பதையும், தாழ்ந்த குலத்தில் பிறப்பதையும் பற்றித் திருவள்ளுவர் பேசாமல் இல்லை. எடுத்துக்காட்டுகள்:

* *இழிந்த பிறப்பாய் விடும்* *(குறள் 133).*
* *குலத்தின் கண் ஐயப் படும்* *(குறள் 958);.*
* *பிறப்புரிமை குன்றக் கெடும்* *(குறள் 134).*
* *குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலா* *(குறள் 954).*

(ஆ) தாம் எந்தச் சமயத்தைப் பின்பற்றியவர் என்பதை உலகம் அடையாளம் காண முடியாத வண்ணம் உலகப் பொதுமறையைப் படைத்த உத்தமர் திருவள்ளுவர். ஆனால், அவருடைய நூலில் வழிபாட்டுத் தெய்வங்கள், வழிபாட்டுச் சடங்குகள் பற்றிய குறிப்பே இல்லை என்று சொல்லிவிட முடியாது. எடுத்துக்காட்டுகள்:

* *மலர்மிசை ஏகினான்* *(குறள் 3).*
* *இந்திரனே சாலும் கரி* *(குறள் 25).*
* *தாமரைக் கண்ணான் உலகு* *(குறள் 1103).*
* *செய்யவள் தவ்வை* *(குறள் 167).*

(இ) தாம் வாழ்ந்த காலச் சூழலில் பல்கியிருந்த செய்திகளையும், கருத்துகளையும் திருவள்ளுவர் தம் நூலில் பயன்படுத்தியிருந்தாலும், அச்செய்திகளையும் கருத்துகளையும் தம் நம்பிக்கைகளை வ்லியுறுத்தும் பிரச்சார சாதனங்களாகப் பயன்படுத்தவில்லை என்பதுதான் சிறப்பு. புராண, இதிகாசத் தொன்மங்கள் அல்லது தொன்மை நிகழ்வுகளை அவ்வாறாகக் குறிப்பிட அவர் தயங்க வில்லை. ஆனால் அவற்றை மிகச்சரியாக எடுத்தாண்டிருக்கிறார். எடுத்துக்காட்டாக இந்திரன் பற்றிய குறிப்பைச் சொல்லலாம். கணவன் மனைவி உறவுக்கு அக்கினியையும், உலகில் நடக்கும் நல்லது, கெட்டது ஆகியவற்றுக்கு சூரிய, சந்திரர்களையும், இந்திரியங்களை அடக்கி வென்று ஒருவன் தவத்தில் நிலைத்துவிட்டதற்கு இந்திரனையும் சாட்சியாக அழைக்கும் தொன்மை வழக்கத்திலிருந்து வழுவாமல் இந்தக் குறளைத் திருவள்ளுவ மாமுனிவர் அமைத்துள்ளார். இந்தத் தீர்வைத்தான் சற்றே தயக்கத்துடன் முனைவர் அறிவுநம்பி அவர்கள் தம் ஆய்வுக் கட்டுரையில் வெளிப்படுத்த முனைகிறார் என்று எண்ணுகிறேன்.

ஒரு சிறிய குறிப்புடன் நிறைவு செய்கிறேன்.

கடவுள் மறுப்பும் வேண்டும், திருக்குறளும் வேண்டும் என்று



அண்ணன்மார்களும் தம்பிமார்களும் செய்த முயற்சிகளைத் தந்தை அங்கீகரிக்கவில்லை. அவர் திருவள்ளுவரைக் காட்டுமிராண்டி என்றே சொல்லி ஒதுக்கிவிட்டார். ஆனாலும் ஒரு விதத்தில் அவர் திருவள்ளுவரைப் பின்பற்றியிருக்கிறார் என்றே தோன்றுகிறது. “கடவுள் இல்லை. கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி” என்று ஆத்திகர்களை மிகக் கடுமையாக அவர் சாடிய வழிமுறைக்கு முன்னோடி திருவள்ளுவரே. ஆம். தாம் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்த கடவுளை மறுத்தவர்களைத் திருவள்ளுவர் பேய் என்றே வன்மையாகச் சித்தரிக்கவில்லையோ!

*“உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து*
*அலகையா வைக்கப்படும்.” (குறள் 850)*

உலகத்தில் உள்ளோர் உண்டு என்பதை ‘இல்லை’ என்று மறுப்பவன் இவ்வுலகில் பேயாகக் கருதப்படுவான்.

உண்டு என்பவன் காட்டுமிராண்டி! இல்லை என்பவனோ பேய்!

அறிவு, அறிவு என்று அலைபாயும் பகுத்தறிவுச் சகோதரர்களுக்குத் திருட்குறட்சாரம் என்று நான் சுட்டிக்காட்ட விரும்பும் குறள் இதுதான்:

*“அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்*
*தந்நோய்போல் போற்றாக் கடை.” (குறள் 315)*